# வளர் தெங்கு

கவிஞர் வே. ஐயாத்துரை



யாழ். இலக்கிய வட்ட வெளியீடு



.K .K. & Co
, New Moor Street .
LOMBO 11.

Pgs . 72 148 x 210 mm . Price Rs. 7.50

# வளர் தெங்கு

சிறுவர் கவிதைகள்,

அரியாலையூர்

கவிஞர் வே. ஐயாத்துரை

வெளியீடு

யாழ். இலக்கிய வட்டம்.

- வளர் தெங்கு
  சிறுவர் கவிதைகள்
- அரியாலையூர்
  கவிஞர் வே. ஐயாத்துரை
- முதற்பதிப்பு: ஆவணி 1993.
- யாழ். இலக்கியவட்ட வெளியீடு
- அச்சுப்பதிவு: மணியோசை அச்சகம்.
  12, பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.
- விலை - 25/=

# அணிந்துரை

திரு. து வைத்திலிங்கம் யாழ் மாவட்ட பிரதி ஆணையாளர்,
தலைவர், யாழ் இலக்கியவட்டம்

சிறுவர்களுக்காக இலக்கியம் படைக்கும்போது சிறுவர்களோடு சிறுவர்களாக ஒன்றி அந்த உணர்வோடு இலக்கியம் படைக்க வேண்டும். என்று பலரும் நல்ல சிறுவர் இலக்கியங்களை படைத்து வருகின்றனர். அந்த வகையில் அரியாலையூர் கவிஞர் வே ஐயாத்துரை "வளர்தெங்கு" என்னும் சிறுவர் கவிதைநூலை வெளியிட்டு இருப்பது பெருமைக்குரிய நிகழ்வாகும். இன்றைய சிறுவர்களுக்கென பல வகைப்படுத்திக்கொண்ட படைப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவை சிறுவர்களுக்கான கவிதைத்துறையை வளம்படுத்திவருகின்றது.

இதனை எமது மூத்த கவிஞரும், யாழ் இலக்கியவட்டத்தின் ஆரம்பகால உறுப்பினருமான நூலாசிரியர் திறம்படச்செய்துள்ளார் எனலாம். சிறுவர் இலக்கியத்தின் மூலம் வருங்காலத்தில் ஒரு நல்ல சமுதாயத்தை நாம் உருவாக்கமுடியுமென, கவிதைகளின் வடிவங்கள் புலப்படுத்துகின்றன. சிறுவர் கவிதைபற்றி பலர் பலவாறு கூறினாலும் என் இளம்வயதில் மீண்டும் மீண்டும் மாடிக்கழித்த கவிதைதான் எனக்கு ஞாபகம் வருகின்றது.

நல்லதைச் சொல்வது கவிதை!!
    நன்மையைச் செய்வது கவிதை!!
வெல்லுஞ் சொல் உளது கவிதை!!
    வித்தை வளர்ப்பது கவிதை!!
அல்லல் அகற்றியே மனிதர்
    அறிவை நிமிர்ப்பது கவிதை!!
கல்லார் மனதிலும் ஈகை
    கனிந்திட வைப்பது கவிதை!!
பூவினும் மணப்பது கவிதை!!
    பொன்னிலு மிளிர்வது கவிதை!!
சாவினைத் தடுப்பது கவிதை!!
    சாகாதிருப்பது கவிதை!!
பாவலர் நாவை வரங்காய்ப்
    படைத்ததில் ஆகுதல் கண்டு
யாவர்க்கு மின்ப மளிக்கும்
    எங்கள் தமிழ்க் கவிதை!!

இதன் உணர்வுகள், இச்சிறுவர் கவிதைநூலில் இழையோடி இருப்பது இந்நூலின் சிறப்பு.

# என்னுரை

வளர்த்த நன்றி மறந்திடாது மனதிற்கேற்ற நூலினை
சிரத்தின் மீது சுமந்திறக்கி செய்த நன்றி காத்தனன்! என்று
வளர்தெங்கில் அமைத்த இவ்விரு அடிகளையும் மேற்கொண்டு
இச்சிறுவர் கவிதை நூலின் என்னுரையைத் தருகின்றேன்.

இன்னிசையால் இன்பம்தரும் யாழ்கரத்தில் ஏந்துவாள்
இன்னிசையைத் தந்தே எழிற்கவிதை பாடவைத்த
அன்னையே வாணி அருள்சுடரே; என்று அன்னை கலாவாணியைப் பூசித்துப் போற்றிவந்தேன் என்னை நேசித்தாள் நிம்மதியாய் யான் வாழ எங்கள் குடும்பத் தலைவர் எனது அண்ணா அமரர் திரு. வே. நடராசா அவர்களையும் அவர் மனைவி எனது அண்ணி திருமதி தங்கம்மா நடராசா அவர்களையும் எனக்கு உறுதுணை புரியும் வண்ணம் உவந்தளித்தாள் கலாவாணி; எழுபது வயது நிரம்பிய என்னைச் சிறார்களின் உள்ளத்தில மூத்த சிறுவனாக மிளிரச்செய்வதற்கு இச சிறுவர்கவிதை நூலை ஆக்கவும் அருளாசி புரிந்தாள் அன்னை கலாவாணி; அவள் எனக்குத் திருவருள் புரியுமுகமாக அகில இலங்கைக் கம்பன் கழகத்துடன் இணைத்தாள், யாழ் இலக்கியவட்டத்துடன் இசைத்தால், இசையோடு பாடி கவிதைகளை மக்களுக்கு இதமாகவூட்டிவைக்க அன்னை கலாவாணியவள் ஓசையுவர்பவளாய் கல்வி ஊக்கந்தருபவளாய் என்னுடனே ஒன்றி இருந்து உறுதுணையளித்தாள் தேசுநிறைந்தவளாய் கல்வித் தேவி சரஸ்வதியே என்று பாடமும் வைத்தாள் அன்புப் பாசமும் வைத்தாள் என்னைப் பாரிசவாத நோயினனாகப் பணியவும் வைத்தாள். எனது சிரேஷ்ட புத்திரி திருமதி ஜெயபாரதி சிவநாசன் தம்பதிகளின் உள்ளக் கமலத்தில் வீற்றிருந்து உற்சாகமூட்டி அழகான கையெழுத்தில வளர்தெங்கு என்னும் சிறுவர்கவிதை நூலை அழகுறத்தொகுத்துவைத்ததைப் பார்வையிட்ட எனது மதிப்புக்குரிய யாழ் இலக்கிய வட்டத்திற்கு யான் என்றும் கடமைபாடுடையேன் ஆகவே 'வளர்த்த நன்றி மறந்திடாது மனதிற்கேற்ற நூலினை சிரத்தின் மீது சுமந்திறக்கும் செய்தநன்றி காத்தனன்; எல்லாம் அன்னையின் திருவருளே ஆட்சி பொலிவாகும்.

பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்டு இன்றைக்கு எட்டுவருடங்களாக வருந்திக்கொண்டிருக்கும் என்னை இதமாகப் பேணிப் பராமரிக்கும் எனது துணைவியார் ஐயா மகாலெட்சுமி அவர்களுக்கு எப்படிநன்றி செலுத்துவேன் இவருக்கு நன்றி செலுத்துவதே இன்றியமையாத கைங்கரியமாகும்.

35, கலைமகள் வீதி — வே ஐயாத்துரை
அரியாலை, யாழ்ப்பாணம்

# நல்லருளை ஈகுவாள்

வெள்ளை மலர் மீதிருந்து
வித்தை தனைக் காட்டுவாள்
உள்ள மலர் மீதிருந்து
நல் லறிவை ஊட்டுவாள்!

கல்வி மிளிர் மேதையரைக்
காசி னியில் காட்டுவாள்
தெள்ளு தமிழ்ப் பாக்களிலே
தீரு சுவையை ஊட்டுவாள்!

இன்னி சையால் இன்பந்தரும்
யாழ் கரத்தில் ஏந்துவாள்
மின்னி மிளிர் மாலையொடு
ஏடு கரம் தாங்குவாள்!

புன்ன கையால் முன் வினையை
போக்கி டவே செய்குவாள்
அன்னை கலைவாணி யவள்
நல்ல ருளை ஈகுவாள்!

# இறைவா உள்ளே நிறைவாய்

இறைவா உள்ளே நிறைவாய் - அந்த
நிறைவால் உலகில் நிறைவேன்
உருவாய் உன்னை அறியேன் - அன்பு
உறவால் நிதமும் அறிந்தேன்!

குறைவாய்க் கூறு பலரும் - சென்று
மறையும் காலம் உனையே
வருவாய் என்று வருந்தும் - அந்த
வகையில் யானும் நிறைவே!

பருவம் சிறிது என்னும் - உன்றன்
பற்றில் கவறி நடவேன்
இரவும பகலும தொழுவேன் - என்
இதயம் தனிலே நிறைவாய்!

அறமும் அன்பும் தவறேன் - உன்றன்
அருளைத் தினமும் தருவாய்
புறமும் பொய்யும் புகலேன் - நல்ல
பொறையும் அறிவும் தருவாய்!

# அன்னை

எந்தன் அன்னை நல்லவளே
இனிமை யோடு பேசிடுவாள்
அ.ஃனம ஊட்டும் பே[illegible]லே
அன்பைக் கூட்டி [illegible]டிடுவாள்!

சின்ன வயதில் அன்னமொடு
சேர்ந்து ஊட்டும் மொழியமுதம்
ாந்தன் உள்ளம் மீதினிலே
என்றும் நீங்கா நிலைத்திடுமே?

கனிவே சொட்டும் தமிழதனால்
கதைகள் சொல்வாள் கருத்துடனே
அணிகள் பூட்டி அலங்கரிப்பாள்
அன்பாய் முத்தம் தந்திடுவாள்!

இனிமை யான உணவினிலும்
எனது அன்னை இன் மொழியே
தனிமை யான இன்பமதாய்
தவழும் எந்தன் உள்ளமதே!

பொன்னைப் போலும் எந்தனையே
பேணிக் கொள்ளும் அன்னைதனை
எந்தன் இதயக் கோயிலிலே
என்றும் ஏத்தி வணங்கிடுவேன்!

# தந்தை

நல்லமொழி சொல்லுகின்ற தந்தை - எங்கள்
நன்மைதனை நாடி நிற்கும் தந்தை
கல்விகற்க காசுதரும் தந்தை - தான்
கஷ்டப்பட்டு எமக்குழைக்கும தந்தை

வல்லமை மிகுந்த எங்கள் தந்தை - வீண்
வார்த்தைகள் விளம்பிடாத தந்தை
சொல்லமைவு கொண்ட நல்லதந்தை - அவர்
சொல்லினைச் சுவைக்குமெங்கள் தந்தை

சாந்தகுண மான அன்புத்தந்தை - ஒரு
சண்டைசச் சரவில்லாத தந்தை
காந்திவழி காட்டுமெங்கள் தந்தை - தன்னைக்
கண்டுமகிழ் கொள்ள வைக்கும் தந்தை

தந்தைமொழி மந்திரமென் றவ்வை - அன்று
சாற்றியதி லேபெரிய உண்மை
எந்தை மொழி காட்டுவதி னாலே - கண்டு
ஏற்றமுடன் வாழுகின்றோம் நாமே

நிந்தனை செய்யாரே எங்கள்தந்தை - நல்ல
நேர்மை நெறி யாளரெங்கள் தந்தை
வந்தனை செய்வோமவரை வாழ்த்தி - மெய்
மாதவனென் றேயவரை ஏற்றி

# ஆசான்

பெற்ற பாசம பேணும் பாசம்
  பிறவி ஒருமைப் பாசம்
கற்றுக் கொடுக்கும் ஆசா னிடத்தில்
  காண லாமே தம்பி!

அறிவை ஊட்டும் நெறியைக் காட்டும்
  அன்பின் அழகன் ஆசான்
பொறுமை காட்டிச் சிறுமை போக்கும்
  புனித னேநல் லாசான்!

பொருளைப் பிரித்துப் புகட்டும் புலமைப்
  பூப்பில் நிறைந்த ஆசான்
அருளைக் கொடுக்கும் இறையைக் காட்டும்
  அதிப னாவான் ஆசான்!

இருளை நீக்கும் இரவி போலும்
  இகத்துக் கினியன் ஆசான்
மருளை மாற்றி மனித நெஞ்சில்
  மாண்பை வளர்ப்பன் ஆசான்!

தேனை நிகர்த்த மொழிகள் பேசிச்
  சித்தத் துள்ளே உண்மை
ஞானப் பாங்கை நாளும் ஊட்டும்
  நல்ல நாதன் ஆசான்!

## கல்வி

அறிவை விருத்தி ஆக்கிடுவாய்
அகத்தை அழகாய் அமைத்திடுவாய்
நெறியை அறியச் செய்திடுவாய்
நிறைவும் பொருளால் மிளிர்ந்திடுவாய்.

வறுமை யுற்றே வருந்திடினும்
மதியோர் மதிக்கச் செய்திடுவாய்
திறமை தன்னை அளித்திடுவாய்
தேசம் புகழச் செய்திடுவாய்!

இறையை அறியச் செய்திடுவாய்
இன்மை இன்பம தந்திடுவாய்
மறையாப் பொருளாய் நீ றிடுவாய்
மனையில் மாட்சி தந்திடுவாய்!

ஊற்றாய் எழுந்து உணர்வளிப்பாய்
ஊக்கம் ஆக்கம் தந்திடுவாய்
வீற்றே இருப்பாய் நெஞ்சினிலே
விளங்கும் கல்விப் பொருளே நீ!

# கணக்குப் பார்ப்போம்

கைவிரல் கால்விரல் நமக்குண்டு
கணக்குப் பார்ப்போம் அதைக்கொண்டு

ஒன்று என்றே பெருவிரலை
உயர்த்தி நிமிர்த்திக் காட்டிடுவோம்

இரண்டு என்றே சுட்டுவிரலை
இணைத்து நிமிர்த்திக் காட்டிடுவோம்

மூன்று என்றே நடுவிரலை
முறையாய் நிமிர்த்திக் காட்டிடுவோம்

நான்கு என்றே அணிவிரலை
நயமாய் நிமிர்த்திக் காட்டிடுவோம்

ஐந்து என்றே சின்னிவிரலை
அழகாய் நிமிர்த்திக காட்டிடுவோம்

வலது கையில் ஐந்து விரலே
இடது கையில் ஐந்து விரலே

இரண்டும் சேர்ந்தால் பத்து விரலே
இப்படிக் கால்கள் இரண்டிலுமே

கைகளில் பத்து விரலுண்டு
கால்களில் பத்து விரலுண்டு

பத்தும் பத்தும் இருபதென்று
பாடம் படித்துப் பயனடைவோம்!

# புத்தகம்

புத்தம் புதிய புத்தகம்
புதிய புதிய பாடங்கள்
வைத்துச் சேர்த்த புத்தகம்
வண்ண வண்ணப் படங்களுடன

தித்திப் பான பாடல்கள்
திகழும் நல்ல கருத்துடனே
சித்தம் மகிழப் பாடிடுவோம்
சேர்ந்து ஒன்றாய் ஆடிடுவோம்!

புத்தகந் தன்னைக கிழித்தெறியோம்
புதியது மங்கா உறையிடுவோம்
நித்தியம் பாது காத்திடுவோம்
நேரம் தவறாது படித்திடுவோம்!

# கூட்டுறவு

சேர்ந்து வாழும் செம்மை நாளும்
செப்புப் சிவ நெறிகளைக்
கூர்ந்து ஆளும் கொள்கை சூழும்
கூட்டு உறவை நாடுவோம்!

ஊர்ந்து போகும எறும்பு கூட
உறவைக் காட்டும் உயர்நிலை
தேர்ந்து தேறித் திணமும் நாட்டிற்
சேர்ந்து வாழப் பழகுவோம்!

ஒருமை உணர்வு ஓங்கும் பான்மை
ஒன்றும் கூட்டு உறவினால்
பெருமை வாய்ந்த சமுக வாழ்வைப்
பேணிப் புவியில் மேவுவோம்!

நாட்டி னுயர்வு நன்மை யாகும்
நாடும் கூட்டு உறவினால்
தேட்டம் பெருகித் தேவை காத்துத்
தேசு பெற்றே வாழுவோம்!

# வளர் தெங்கு

நிலத்தைத் தோண்டி நீர் நிறைந்த
கலத்தை வைத்தே மூடினேன்
தலத்து நீரை இறைத் திறைத்து
கலத்தை மேவி ஊற்றினேன்!

கலத்து நீரும் வற்றிப் பூத்து
துடித் தெழுந்தாள் பிள்ளையும்
நிலத்து நீரை உண்டு உண்டு
நெடிது கூடி வளர்ந்தனள்!

களைத்து இளைத்து வருபவரை
காத்து நிழல் கொடுத்தனள்
கனத்த பூவைத தலையிற் சூடி
கரக மாடி நின்றனள்!

வளர்த்த நன்றி மறந்திடாது
மனதிற் கேற்ற நீரினை
சிரத்தின் மீது சுமந்திறக்கி
செய்த நன்றி காத்தனள்!

குலத்தை வளர்த்து வளத்தைப் பெருக்க
குலைகள் ஈனும் தென்னையாள்
நலத்தைப் பெருக்கி நாட்டின் வாழ்வில்
தனத்தைப் பேணிக் கொள்ளுவீர்!

# பொங்கல்

பரவி இரவி வந்தது
பானை பொங்கிச் சொரியுது
அரிசி பயறு சர்க்கரை
அதனிற் சேர இருக்குது!

அள்ளி அள்ளிப் போடவே
அரிசி பயறு துள்ளின
துள்ளிக் குதித்து வேகவே
சுவைக்கும் அமுது ஆயின!

அள்ளி அமுதைப் படைத்து
அழகுத் தீபம காட்டினோம்
கிள்ளிக் கிள்ளி யுண்டுபின்
ஆசை தீர்ந்து துள்ளினோம்!

# முழுமதி

அந்தர மான வீதியிலே
அழகு நிலவ வந்திடுவான்
சந்திர னான அவனுருவம்
சரியாய் தோன்றும் ஒரு நாளே!

சிந்திப் பரந்த வெண்மணிபோல்
திகழும் நட்சத்திரங்களுடன்
சந்திக் கின்றான் இரவினிலே
செகத்தில் ஒளியை வீசுகிறான்!

சுந்தரமான முழு மதியால்
துலங்கும் நாளே பூரணையே
வந்தது எங்கள் விடுதலையாய்
வையக மென்றும் போற்றிடவே!

# கண்காணிப்பிற் சிறந்தவர்

சட்டை தொப்பி சப்பாத்து
சரியாய் மாட்டி வார்பூட்டி
சட்டத் தோடே ஊர்காக்கும்
கெட்டிக் காரர் பொலிசாரே!

பட்டி கட்டிப் பணிசெய்வார்
பதவியில் உயர்வைக் கொண்டவரே
பட்டி ஏறப் பலவழக்கைப்
பறந்து சென்றே பிடிப்பாரே!

எட்டுத் திக்கும் நகர்காவல்
இரவும் பகலும் செய்வாரே
துட்டர் தம்மைத் துரத்திடுவார்
சூழ்ச்சி யாகப் பிடிப்பாரே!

கட்டுப் பாட்டில் நிறைந்தவரே
கண்கா ணிப்பிற் சிறந்தவரே
கொட்டும் மழையைப் பாராரே
கொண்ட பணியைச் செய்வாரே!

# நுளம்பு

சின்னஞ் சிறிய நுளம்பு வந்தே
சேட்டை செய்து போகும்
பென்னம் பெரிய நோய்கள் பின்னே
பேத லிக்கச் செய்யும்!

கற்ற ரீந்தும் கவனி யாது
கண்ண யர்ந்தே விட்டால்
சுற்றி வந்தே நுளமபு ஏதோ
சொல்லி ஊசி போடும்!

நுளம்பு போட்ட ஊசி கெட்ட
நோயை யாக்கி நாளும்
அழுந்தச் செய்யும் அதற்கு ஊசி
ஔட தங்கள் வேண்டும்!

முற்றம் முலை முடுக்கு யாவும்
முனைந்து சுத்தி யாக்கு
பற்றை பள்ளம் பாசி நீக்கிப்
பரப்பை நேர்த்தி யாக்கு!

# வண்ணாத்திப் பூச்சி

புழுவில் இருந்து வண்ணாத்திப்
பூச்சி வந்தே பொருந்துங்காண்
செழுமை செறிந்த மலர்களிலே
தேனைச் சுவைத்துச் செல்லுங்காண்!

வண்ண வண்ணச் சிறகுகளில்
வரிகள் படர்ந்த வண்ணாத்தி
கண்ணுக் கினிய காட்சிதரும்
கட்டழ காகிய வண்ணாத்தி!

பட்டுப் போலும் வண்ணாத்தி
பறந்து பறந்து பல செடியைத்
தொட்டுப் பார்க்கும் வண்ணாத்தி
சுதந்திர மான வண்ணாத்தி!

பறந்து திரியும் வண்ணாத்தி
பற்பல நிறங்களில் வண்ணாத்தி
சிறகு ஒடிந்தால் வண்ணாத்தி
செயலற் றதுவே செத்துவிடும்!

# பன்ன வேலை பாரீர்

சின்ன வேலை யல்ல எங்கள்
பன்ன வேலை பாரீர்
வன்ன வன்ன வேலை யோடு
மின்னு வதைப் பாரீர்!

கன் னலமில் லாப் பனையின்
சார்வு தனை வெட்டி
மின்னு கின்ற வெய்யி லிலே
விரித்துக் காய வைப்போம்!

நன்கு காய்ந்து வெண்மை யாக
நலிவி வாது கட்டி
பின்பு அதன் ஈர்க்கைத் தள்ளி
பெரிய சட்டம் செய்வோம்!

சின்னச் சின்னச் சட்டமாகச்
சீர் அமைத்து வார்ந்தே
மின்னிப் பின்னி வன்ன மிட்டுப்
பன்ன வேலை செய்வோம்!

நன்மை தரும் நம் பொருளை
நாளும் பேணிக் காப்போம்
தொன்மை மிகும் பன்ன வேலை
மின்னும் வகை செய்வோம்!

# இன்று நாங்கள் சிறுவர்களே!

இன்று நாங்கள் சிறுவர்களே
எதிர்கா லத்திற் பெரியவரே
நன்றாய் வாழப் பழகிடுவோம்
நன்மைகள் செய்தே நயந்திடுவோம்!

அம்மா அப்பா பெரியவரே
அன்பாய் எம்மை அணைப்பவரே
தம்பி தங்கை சிறியவரே
தயவாய் அவரைத் தழுவிடுவோம்!

ஒன்று இரண்டு மூன்று தொடர்
ஒன்றி நான்கைந் தாறாகும்
பின்னே ஏழெட்டு ஒன்பதுவும்
பிறந்தே நிறைந்த பத்தாகும்!

பாலப் பருவம் பத்தென்றே
பாட்டி பழமொழி பகர்வாரே
மேலும் மேலும் வயதுவர
விளங்கும் பருவம பலவாகும்!

இளமை முதுமை இரண்டிற்கும்
இடையில் வாலிபம் இசைவாகும்
அழகும் அதிலே அசைந்தாடும்
அதன்முன் படித்து ஆளாவோம்!

# பள்ளிக்கூடம் செல்லுவோமடா!

எங்கள் செல்வம் கல்வி யென்று
எண்ணு வோமடா - அதனை
ஏற்றுக் கொள்ளப் பள்ளிக் கூடம்
செல்லு வோமடா!

பள்ளிக் கூடம் எங்க ளுக்குப்
பாது காப்படா - அதனைப்
பாது காக்க எங்க ளுக்கும்
பங்கு உண்டடா!

பிள்ளைச செல்வம் பெற்றோ ருக்குப்
பெரிய தாமடா - அந்தப்
பிள்ளைச் செல்வம் கல்விச் செல்வம்
பேண வாமடா!

செல்வ மீட்டிச் செல்வம் சேர்க்கும்
செம்மைப் பாங்கடா - கல்விச்
செல்வ மீட்டிச் சீரைத் தேடிச்
செல்லு வோமடா!

# உண்டு வாழுவீர்

என்னைக் கொத்தி வெட்டினாலும்
    எதிர்ப்புச் செய்திடேன்
எருவைச் சருகை ஊட்டினாலும்
    இதத்தைக் கேட்டிடேன்!

அன்னை யென்று அழைத்திட்டாலும்
    அணைக்கச் சென்றிடேன்
அவனி யென்று அருட்டினாலும்
    அசைந்து நின்றிடேன்!

என்னி டத்தில் இயற்கையான
    இதங்கள் பதங்களை
முன்னி டத்தில் நயப்பதற்கு
    முயற்சி கொள்ளுவீர்!

வாயு ரைக்கு வளங்கொடுக்கும்
    வகையில் யானிலலை
நேயம் மிக்க செயலைக் கண்டே
    நிறைவை எட்டுவேன்!

ஊறு நீடல் ஆறுகுளம்
    ஒன்றிச் செறிந்துளேன்
உழவு செய்து விளைவுகண்டு
    உண்டு வாழுவீர்!

## கண்ணுண்டு கமத்துக்குத் தம்பி

மண்கிண்டி விளையாடும் தம்பி - நல்ல
மணிதூவி நீர்ப்பாய்ச்சி மணந்தேறு தம்பி
கண்ணுண்டு கமத்துக்குத் தம்பி - நல்ல
கதிர்மேவும் கவினைக்கண்டு களையாறு தம்பி!

விண்கொண்ட உலகத்தில் தம்பி - நல்ல
விளைவுள்ள நிலமுண்டு விரும்புவாய் தம்பி
பண்ணுண்டு பயிரோங்கும் தம்பி - எங்கள்
பசியாறும் பயனுண்டு படிகாக்கும் தம்பி!

உன் சொந்த நாட்டிற்குத் தம்பி - என்றும்
உழைக்கின்ற உழவனாய் உயருவாய் தம்பி
அன்பொன்றி அகமோங்கு தம்பி - நாட்டில்
அடிமைப் படாதுநே ராக்கங்கொள் தம்பி!

பின்சென்று ஏந்காதே தம்பி - உன்றன்
பிரயாசப் பெருக்கினால திருவோங்கும் தம்பி
முன்னின்று முயலுவாய் தம்பி - உன்றன்
முகம்செல்லும் முதலாகும் கமங்கொள்ளு தம்பி!

# தூரப் பறக்குது பட்டம்

பற்றிப் பிடிப்பவர் ஓர்புறமே - பட்டம்
பறக்க இழுப்பவர் மறுபுறமே
சுற்றிய நூலும சிதைவுறவே - பட்டம்
தூரப் பறக்குது பாருங்களே!

சட்டம் நிறைபோட்டுக் கட்டியதே - நல்ல
பட்டம் பறப்பதைப் பாருங்களே
எட்டப்போய் விண்ணைத் தொட்டதுபோல் - பட்டம்
ஏறி நிலைப்பதைப் பாருங்களே!

ஏற்றிட உதவிய நூலதுவே - பட்டம்
இறக்கிட வழிவகை செய்கிறதே!
காற்றிடர் வந்ததும் பட்டமதே - சோர்ந்து
கவிழ்ந்து விழுவதைக் காணுங்களே!

மாற்றி அடித்திடும் காற்றதனால் - பட்டம்
ஏற்ற முடியாது போய்விடுமே
நாற்றிசை வீசிடும் காற்றினிலே - பட்டம்
நன்னிலைப் பெய்யாது விண்ணினிலே!

ஏற்றி இறக்கிடும் வீரர்களே - பட்டம்
ஏறிட நல்ல நூல் தேடுவீரே
காற்றி விசையையும காணுவீரே - பட்டம்
கஷ்டமில்ல லாமலே ஏறிடுமே!

விட்டமது கட்டி ஏறறுவீரே - அல்ல(து)
வெட்ட வெளிதன்னை நோக்குவீரே
பட்டமது கட்டி ஏறறிடிலே - நல்ல
பருவ மிகுங்காறறை நாடுவீரே!

# ✓ காக்கை தாகம் தீர்த்ததே

தாகங் கொண்டு காக்கை யொன்று
தண்ணி தேடி வந்ததே
சாடி ஒன்றின் அடியிற கொஞ்சம்
தண்ணி இருக்கக் கண்டதே!

வேக மான தாகந் தீர்க்க
வேண்டு மென்று காக்கையும்
யூக மாகச் சாடி நீரை
உயரச் செய்ய முனைந்ததே!

சல்லிக் கல்லை ஒவ்வொன்றாகச்
சாடிக் குள்ளே போட்டதே
கல்லும் சேர நீரும் உயரக்
காக்கை தாகம் தீர்த்ததே!

புத்தி வந்து காக்கை யயர்
சக்தி சார்ந்த தன்மையை
வைத்து நாமும் புத்தியாக
வாழ வழிகள் செய்குவோம்!

# கூடு கட்டும் காக்கா

கூடு கட்டி முட்டை யிட்டுக்
குஞ்சு பொரிக்கும் காக்கா
குயிலின் முட்டைக் குஞ்சுக் கோலம்
குரலிற் காணும் காக்கா!

பாடு பட்டுக் கூடு கட்டிப்
பாது காக்கும் காக்கா
பாடும் குயிலின் குஞ்சைக கொத்திப்
பறக்கச் செய்யும் காக்கா!

குச்சிக் குச்சித் தடிகள் கொண்டே
கூடு கட்டும் காக்கா
உச்ச மான மரங்கள் தம்மை
உரிமை கொள்ளும் காக்கா!

இச்ச கத்தில் இனத்தை கூட்டி
இரையை உண்ணும் காக்கா
அச்சங் காட்டி அங்கும இங்கும்
அலைந்து கத்தும் காக்கா!

ஒன்று பட்டு உண்டு வாழும்
ஒருமைப் பாட்டைக் காக்கா
அன்றும் இன்றும் என்றும் காட்ட
ஐக்கி யங்கொள் காக்கா!

# வானைப் பிளக்கும் அரோகரா

கந்தன் வாழும் கதிர்காகமம்
    கண்டோ ருள்ளம் களிகூரும்
முந்தை வினைகள் பறந்தோடும்
    முருகன் பதியைத் தொழுதாலே!


கங்கை கனிலே நீராடி
    காவடி எடுப்பார் கலைகூடி
அங்கம் குலுங்க அருளோடு
    ஆடிப் பாடித் தொழுவாரே!

கற்பூ ரத்தால் ஒளியேறறி
    கதிர்கா மத்தான் பதிமேவ
அற்புத மாக வலம்வருவார்
    அடியார் பலரும் துதிபாடி!

உச்ச மான கதிர்மலையில்
    ஒளிரும் ஆறு முகவனையே
பட்ச முடனே வணங்கிடவே
    பறந்து ஓடிச் செல்வாரே!

யானை மீதே எழுந்தருளி
    எங்கள் வேலன் பவனிவர
வானைப் பிளக்கும் அரோகரா
    மங்கல இசையும் ஒலித்திடுமே!


PRASADINI
My Car



# கவிஞர்.
# வே. ஐயாத்துரை
# வளர் தெங்கு

கவிஞர் வே. ஐயாத்துரை அல்வாயைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வதிவிடமாகவும் கொண்டவர். நல்லாசிரியர்களிடம் தமிழ் பயின்ற இவர்; இயல்பாகவே கவிதைபாடும் ஆற்றல்படைத்தவர்; ஒரு வரகவி. கவித்திறன் மட்டுமன்றி இசைத்திறனும் வாய்க்கப் பெற்றவர்- நடிப்புக்கலையிலும் கைதேர்ந்தவர்.

இலங்கையில் ஒரேயொரு 'கலைமகள்' கோயில்தான் உண்டு. அக் கோயிலைக் கட்டி குடமுழுக்கும் செய்து பூசித்து வரும் பாக்கியம் பெற்றவர் இக்கவிஞர்.

''கன்னல் இசைபொழியும் கவி ஐயாத்துரை'' எனக் கவிஞர் கந்தவனத்தால் பாராட்டப்பெற்ற இவர் 1965 ஆம் ஆண்டிலிருந்து ஏறாத கவியரங்க மேடைகளேயில்லையெனலாம். இவருடைய கவிதைகளில் இயற்கையழகும், பக்திச்சுவையும், நகைச்சுவையும், சமூக சீர்திருத்தக் கருத்துக்களும் விரவி வரக் காணலாம்.

'வெள்ளைக் கமலம்' எனும் கவிதை நூலை முன்னர் வெளியிட்ட இப்பாவலருடைய 'வளர்தெங்கு' எனும் சிறுவர் பாடல் இவருடைய குழந்தையுள்ளத்துக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும். பல பரிசில்களும் பாராட்டுக்களும் பெற்ற இவர் பழகுவதற்கு இனியவர், பண்பாளர், நல்ல பக்திமான்.

கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை